# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ

## அதி விசேஷமானது

අංක 2191/45 - 2020 සැප්තැම්බර් මස 04 වැනි සිකුරාදා - 2020.09.04

*2191/45 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 04 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதியால் (393 ஆம் அத்தியாயமான) விசாரணை ஆணைக்குழுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய 2019, செத்தெம்பர் மாதம் 21 ஆந் திகதிய 2141/88 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட அறிவித்தலின் மூலம் 2019, செத்தெம்பர் மாதம் 20 ஆந் திகதி தாபிக்கப்பட்ட "2019, ஏப்பிறல் மாதம் 21 ஆந் திகதி இடம்பெற்ற குண்டுத்தாக்குதல்கள் தொடர்பாகப் புலனாய்வு செய்து விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கையிடுதல் அல்லது தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கான சனாதிபதி விசாரணை ஆணைக்குழு"வின் தற்காலப் பணிகளை நிறைவேற்றி அதன் இறுதி அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டிய 2020, மாச்சு மாதம் 20 ஆந் திகதி முடிவுறும் ஆறு மாத காலமானது, சொல்லப்பட்ட சட்டத்தின் 4 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு 2020, மாச்சு மாதம் 17 ஆந் திகதிய 2167/5 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட அறிவித்தலின் மூலம் 2020, செத்தெம்பர் மாதம் 20 ஆந் திகதி வரையான 06 மாத காலத்திற்கு நீடிக்கப்பட்டதுடன் மீண்டும் ஒரு முறை சொல்லப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு 2020, செத்தெம்பர் 20 ஆந் திகதியிலிருந்து 03 மாத காலத்தால், அதாவது 2020, திசெம்பர் மாதம் 20 ஆந் திகதி வரை இத்தால் நீடிக்கின்றேன்.*

**கோட்டாபய ராஜபக்ஷ,**
*சனாதிபதி.*

*சனாதிபதி அலுவலகம்,*
*கொழும்பு 01,*
*2020, ஓகத்து 31.*